بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ   نَحْمَدُهٗ وَنُصَلِّی عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْمِ   وَعَلٰی عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

# பத்ர் போரில் பங்கு பெற்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபாக்களின் வாழ்க்கையிலிருந்து ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 01 மார்ச் 2019 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களின் நற்குறிப்பின் தொடர் எடுத்துக் கூறப்பட்டு வருகின்றது. இன்றும் பத்ர் போர் சஹாபாக்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். முதலாவது சஹாபி ஹஸ்ரத் ஹவ்லி பின் அபீ ஹவ்லி ஆவார்கள். ஹஸ்ரத் ஹவ்லி அவர்கள் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் ஹவ்லி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

அடுத்த சஹாபி ராஃபி பின் அல் முஅல்லா ஆவார்கள். அன்னார் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஹபீபைச் சார்ந்தவர் ஆவார். அன்னாரின் தாயாரின் பெயர் இதாம் பின்த் அவ்ஃப் ஆகும். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ராஃபி மற்றும் ஹஸ்ரத் ஸஃப்வான் பின் பேஸா ஆகியோருக்கிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் கலந்து கொண்டார்கள். சில அறிவிப்புகளில், இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் ஷஹீதானர்கள் என்று வந்துள்ளது.

அடுத்த சஹாபி துவிஷ்ஷிமாலைன் ஹுமைர் பின் அப்தே அம்ர் ஆவார்கள். அன்னாரது சொந்த பெயர் உமைர் ஆகும். அன்னாரது சுட்டுப்பெயர் அபூ முஹம்மது ஆகும். ஹஸ்ரத் உமைர் அவர்கள் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து மதீனா வந்து சஅது பின் கைஸ்மாவுடன் தங்கினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் யஸீத் பின் ஹாரிஸுடன் அன்னாருக்கு சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். இந்த இரண்டு சஹாபாக்களும் பத்ர் போரில் ஷஹீதானார்கள். ஷஹாதத்தின்போது அன்னாருடைய வயது 30 ஆகும்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ராஃபி பின் யஸீத் ஆவார். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஸஹூர் பின் அப்துல் அஷ்ஹலைச் சார்ந்தவர். அன்னாரின் தாயாரான அக்ரப் பின்த் மஆஸ் புகழ்பெற்ற சஹாபியான ஹஸ்ரத் சஅது பின் மஆஸ் அவர்களின் சகோதரி ஆவார்கள். உஸைது மற்றும் அப்துர் ரஹ்மான் ஆகிய இரவரும் அவர்களுடைய மகன்கள் ஆவர். ஹஸ்ரத் ராஃபி அவர்கள் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் உஹது போரில் ஷஹீதானார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸக்வான் பின் அப்தே கைஸ் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனு ஸுரைக்கைச் சார்ந்தவர்கள். முதலாவது மற்றும் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள்.

அன்னார் தொடர்பாக எடுத்துக் கூறத்தக்க விஷயம் என்னவென்றால், அன்னார் மதீனாவிலிருந்து ஹிஜ்ரத் செய்து பெருமானார் (ஸல்) அவர்களை சந்திக்க மக்கா சென்றார்கள். அன்னார் அன்ஸாரி முஹாஜிர் என்று அழைக்கப்பட்டார்கள். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். உஹது போரில் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள்.

சுஹைல் பின் அபீ சாலிஹ் அறிவிக்கின்றார்: பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போருக்காக சென்றபோது ஓர் இடத்தை சுட்டிக் காட்டியவாறு சஹாபாக்களிடம், இங்கு யார் செல்வார்? என்று கேட்டார்கள். அதற்கு பனு ஸுரைக்கைச் சேர்ந்த ஸக்வான் பின் அப்தே கைஸ் என்ற ஒரு சஹாபி எழுந்து நின்று, யா ரஸூலல்லாஹ்! நான் செல்வேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் நீங்கள் யார்? என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் நான் ஸக்வான் பின் அப்தே கைஸ் ஆவேன் என்று கூறினார்கள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்களை அமரும்படி கூறினார்கள். அன்னார் இந்த விஷயத்தை மூன்று முறை கூறினார்கள். பிறகு அன்னார் இந்த இந்த இடத்திற்கு செல்லுங்கள் என்று கூறினார்கள். அதற்கு ஸக்வான் அவர்கள், யா ரஸூலல்லாஹ்! நான்தான் இந்த இடங்களுக்குச் செல்வேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நாளைய தினம் சுவர்க்கத்தின் பசுமை நிறைந்த தோட்டத்தில் நடந்து செல்லக்கூடிய அந்த நபரை எவராவது காண விரும்பினால் இந்த நபரைப் பார்க்கட்டும்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் ஸக்வான் அவர்கள் தமது குடும்பத்தைச் சார்ந்தவர்களிடம் விடைபெறுவதை கூறச் சென்றார்கள். அன்னாரது மனைவிகளும், மகள்களும், நீங்கள் எங்களை விட்டு விட்டு செல்கின்றீர்களா? என்று கேட்டனர். அதற்கு அன்னார் அவர்களை விட்டு விலகி நின்றவாறு அவர்களை நோக்கி, இனி கியாமத் நாளில்தான் நாம் சந்திப்போம் என்று கூறினார்கள். பிறகு அன்னார் உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஹவ்வாத் பின் ஜுபைர் அன்ஸாரி ஆவார்கள். ஹஸ்ரத் ஹவ்லாத் பின் ஜுபைர் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜுபைர் ஆகிய இருவரும் சகோதரர்கள் ஆவர். பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போரில் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்ட அம்மை எய்யும் திறமை பெற்ற ஐம்பது நபர்களில் இவர்களது சகோதரரையும் நியமித்தார்கள். ஹஸ்ரத் ஹவ்வாத் அவர்கள் நடுத்தர உயரத்தைக் கொண்டவர். அன்னார் ஹிஜ்ரி 40 வது ஆண்டில் தமது 74 வது வயதில் மதீனாவில் மரணமடைந்தார்கள்.

ஹஸ்ரத் ஹவ்வாத் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுன் இணைந்து பத்ர் போரில் கலந்து கொள்வதற்காக சென்றார்கள். ஆனால் வழியில் ஒரு கல் அவர்களின் மீது பட்டதன் காரணமாக காயமுற்றார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை மதீனாவிற்கு திருப்பி அனுப்பி விட்டார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போரில் கிடைத்த செல்வத்தில் மற்றும் நற்கூலியில் அன்னாரையும் இணைத்துக் கொண்டார்கள். ஆக அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களைப் போன்றவரே ஆவார்கள். உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஹவ்வாத் கூறுகின்றார்கள்: ஒரு முறை நான் நோயுற்றிருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் என்னை சந்திக்க வந்தார்கள். நான் குணமடைந்த பிறகு அன்னார் என்னிடம், ஹவ்வாதே! உமது உடல் ஆரோக்கியமானதாக ஆகிவிட்டது. எனவே அல்லாஹ்விடம் என்ன வாக்குறுதியை நீர் செய்தீரே அதை நிறைவேற்றுவிராக என்று கூறினார்கள். அதற்கு, அல்லாஹ்விடம் நான் எந்த வாக்குறுதியும் செய்யவில்லையே என்று கூறினேன். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோயுற்றிருக்கின்ற எந்தவொரு நோயாளியும் அல்லாஹ் எனக்கு ஆரோக்கியத்தைப் வழங்கினால் இதை செய்வேன். அதைச் செய்வேன் என்று வேண்டாமல் அல்லது எண்ணம் கொள்ளாமல் இருந்தது கிடையாது.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: ஆக இது எத்தகைய விஷயம் என்றால் நம் அனைவருக்கும் சிந்திக்கக்கூடிய, கவனம் செலுத்தக்கூடிய விஷமாகும். அகழ் போரின் சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பனூ குரைழாவைச் சேர்ந்தவர்கள் உடன்படிக்கையை மீறியதாக தகவல் கிடைத்தது. எனவே அன்னார் ஒரு குழுவை அவர்களிடம் அனுப்பி வைத்தார்கள். அதில் ஹஸ்ரத் ஹவ்வாத் பின் ஜூபைர் அவர்களும் இருந்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது: அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹவ்வாத் அவர்களை தமது குதிரையில் பனூ குரைழாவிடம் அனுப்பினார்கள். அந்த குதிரையின் பெயர் ஜனாஹ் ஆகும்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ரபீஆ பின் அக்ஸம் ஆவார்கள். அன்னாரது சுட்டுப் பெயர் அபூ யஸீத் ஆகும். ஹஸ்ரத் ரபிஆ சிறிய உயரத்தைக் கொண்ட தடித்த உடலைக் கொண்டவர் ஆவார். அன்னார் முஹாஜிர் சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். பத்ர் போரில் பங்கு பெற்றபோது அன்னாரது வயது 30 ஆகும். பத்ர் போர் மட்டுமின்றி உஹது, அகழ் மற்றும் ஹுதைபிய்யா உடன்படிக்கை மற்றும் கைபர் போரிலும் அன்னார் பங்கு பெற்றார்கள். கைபர் போரில் அன்னார் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். அன்னாரை ஹாரிஸ் என்ற பெயருடைய யூதன் நதாஃ என்ற இடத்தில் ஷஹீதாக்கினான். நதாஃ கைபரில் இருக்கின்ற ஒரு கோட்டையின் பெயராகும். ஷஹாதத்தின்போது அன்னாரது வயது 37 ஆகும்.

அடுத்த சஹாபி ரிஃபா பின் அம்ர் அல்ஜஹனி ஆவார்கள். வதீஆ பின் அம்ர் என்றும் கூறப்படுகிறது. ஹஸ்ரத் ரிஃபாஃ பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். அன்னார் அன்ஸார் கோத்திரத்தின் பனூ நஜ்ஜாரின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸைது பின் வதீஆ ஆவார்கள். அன்ஸார் கோத்திரத்தின் ஹஸ்ரஜை சார்ந்தவர்கள். அன்னார் பைஅத்தே உக்பா மற்றும் பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ரபீஃ பின் ராஃபி அன்ஸாரி ஆவார்கள். அன்னார் பத்ர், உஹது போர்களில் கலந்து கொண்டார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸைது பின் முஸைன் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றுள்ளார்கள். மதீனா ஹிஜ்ரத் செய்த நேரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது மற்றும் ஹஸ்ரத் மிஸ்தஃ பின் உஸாஸா ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் இயாஸ் பின் ஸுஹைர் ஆவார்கள். அன்னார் அபிஸீனியாவிற்கு இரண்டாவது முறையாக ஹிஜ்ரத் செய்தபோது கலந்து கொண்டார்கள். அங்கிருந்து திரும்பி வந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். மேலும் ஹஸ்ரத் குல்ஸூம் பின் அல்ஹதமுடன் தங்கினார்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஹிஜ்ரி 30 வது ஆண்டில் மதீனாவில் அன்னார் மரணமடைந்தார்கள்.

அடுத்த சஹாபி ரிஃபா பின் அம்ர் அன்ஸாரி ஆவார்கள். அன்னார் 70 அன்ஸார்களுடன் இரண்டாவது பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் உஹது போரில் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸியாத் பின் அம்ர் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் நண்பர் ஆவார்கள். பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். அன்னார் பனூ சாயிதா பின் கஅப் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சாலிம் பின் உமைர் பின் சாபித் ஆவார்கள். அன்ஸார் கோத்திரமான பனூ அம்ர் பின்அவ்ஃபைச் சார்ந்தவர்கள். பைஅத்தே உக்பாவில் கலந்து கொண்டார்கள். பத்ர், உஹது, அகழ் போர்களில் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். தபூக் போரில் கலந்து கொள்வதற்காக எந்த ஏழு ஏழை சஹாபாக்களிடம் பயணத்திற்கான வசதி இருக்கவில்லையோ அந்த சஹாபாக்களில் இவர்களும் ஒருவர் ஆவார்கள்.

இந்த ஏழு ஏழை சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார்கள். இவர்கள் தபூக் போரில் கலந்து கொள்ள விரும்பினர்கள். இந்த சஹாபாக்கள் அன்னாரிடம் எங்களுக்கு ஏறிச் செல்ல ஏதாவதொன்றினை கொடுங்கள் என்று கேட்டார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று கூறினார்கள். எனவே அந்த மக்கள் திரும்பிச் சென்றனர். செலவு செய்வதற்கு எதுவுமே இல்லையே என்ற வருத்தத்தில் அவர்களின் கண்களில் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

இப்னு அப்பாஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனத்தில் அதாவது, போர் அறிவிப்பு செய்யப்பட்ட போது தாங்கள் ஏறிச் செல்ல ஏதாவதொரு ஏற்பாட்டினை நீர் செய்ய வேண்டுமென்பதற்காக உம்மிடத்தில் வந்தவர்களிடம் குற்றம் எதுவும் இல்லை. இதற்கு நீர் உங்களை ஏற்றிச் செல்லக் கூடியது எதுவும் என்னிடமில்லையே என்று பதிலளித்தீர். (இப்பதிலைக் கேட்டு) அவர்கள் சென்று விட்டனர். (இறைவழியில்) செலவு செய்வதற்குத் தங்களிடம் எதுவும் இல்லையே என்ற கவலையினால் அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது **(9:92)** என்று கூறப்பட்டுள்ள இந்த வசனத்தில் எந்த மக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அதில் சாலிம் பின் உமைர் மற்றும் சஃலபா பின் ஸைது ஆகியோர் அடங்குவர்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் சூரா தவ்பாவின் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: இவர்கள் திரும்பிச் சென்ற பிறகு ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள் மூன்று ஒட்டகங்களை வழங்கினார்கள். மேலும் நான்கு ஒட்டகங்களை வேறு சில முஸ்லிம்கள் வழங்கினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள், ஒவ்வொருவருக்கும் ஒரு ஒட்டகத்தை வழங்கினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் இந்த சம்பவத்தை ஏன் எடுத்துக் கூறியுள்ளது என்றால், செல்வந்தர்கள், பயணத்திற்கான வழிகளை பெற்றிருந்தவர்கள் பொய்யான சாக்குப் போக்கைத் தேடினர். அவர்கள் இந்த ஏழை முஸ்லிம்களின் கலப்பற்றத்தன்மையோடு போட்டி போட்டு காட்டட்டும் என்பதற்காகவே ஆகும்... இந்த வசனத்திலிருந்து இதுவும் தெரிய வருகின்றது. அதாவது எந்த மக்கள் மதீனாவில் பின்தங்கி விட்டனரோ அவர்கள் அனைவரும் நயவஞ்சகர்கள் கிடையாது. மாறாக அவர்களில் கலப்பற்ற முஸ்லிம்களும் இருந்தனர். அவர்களிடம் செல்வதற்கான பொருட்கள் இல்லாததனால்தான் அவர்களால் செல்ல முடியவில்லை.

இதனை விளக்கியவாறு மேலும் அன்னார் கூறுகின்றார்கள்: அபூ மூஸா இந்த மக்களின் தலைவராக இருந்தார்கள். அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அப்போது நீங்கள் எதை கேட்டீர்கள்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், இறைவன் மீது ஆணையாக! நாங்கள் ஒட்டகத்தை கேட்கவில்லை. நாங்கள் குதிரையை கேட்கவில்லை. மாறாக, நாங்கள் வெறுங்காலுடன் இருக்கின்றோம். கால்களில் காலணிகள் கிடையாது. மேலும் இந்த நீண்ட பயணத்தை நடந்து எங்களால் செல்ல முடியாது. கால்கள் காயமடைந்து விடும். பிறகு எங்களால் போர் செய்ய முடியாது. எங்களுக்கு காலணிகளின் ஒரு ஜோடி கிடைத்தால் போதும். நாங்கள் அந்த காலணிகளை அணிந்து ஓடியவாறு எங்களது சகோதரர்களுடன் இணைந்து இந்தப் போரில் கலந்து கொள்வதற்காக சென்றடைந்து விடுவோம் என்றே கேட்டோம் என்று கூறினார்.

இது அவர்களின் ஏழ்மையின் நிலையாக இருந்தது. இந்த உணர்வே அவர்களிடம் காணப்பட்டது. ஹஸ்ரத் சாலிம் பின் உமைர் அவர்கள் ஹஸ்ரத் முஆவிய்யா அவர்களின் காலகட்டம் வரை உயிருடன் இருந்தார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சுராக்கா பின் கஅப் ஆவார்கள். அன்னார் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர். அன்னாரின் தாயார் பெயர் உமைரா பின்த் நுஃமான் ஆகும். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். முஆவிய்யா அவர்களின் காலத்தில் அன்னார் மரணமடைந்தார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சாயிப் பின் மஸ்வூன் ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் பின் மஸ்வூனின் சகோதரர் ஆவார். அன்னார் அபிஸீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்த ஆரம்ப முஹாஜிரீன்களில் ஒருவர் ஆவார். பத்ர் போரில் பங்கு பெறும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. ஹஸ்ரத் சாயிப் அவர்களுக்கு பெருமானார் (ஸல்) அவர்களுடன் வியாபாரம் செய்வதற்கான கண்ணியமும் கிடைத்துள்ளது.

சீரத் காத்தமுன் நபிய்யீனில் இந்த சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது சாயிப் ஒரு சஹாபி ஆவார். அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டபோது சில மக்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னிலையில் அவர்களைப் பற்றி புகழ்ந்து கூறினர். அதற்கு அன்னார், நான் உங்கள் அனைவரை விடவும் இவரை நன்கு அறிந்தவனாக இருக்கின்றேன்

என்று கூறினார்கள். அதற்கு சாயிப் அவர்கள், ஆம்! யா ரஸூலல்லாஹ்! உங்கள் மீது எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டும். தாங்கள் ஒரு முறை என்னுடன் வியாபாரத்தில் ஒன்றாக இருந்தீர்கள். தாங்கள் எப்போதும் தங்களது விஷயத்தை மிகச் சிறந்ததாகவே வைத்திருந்தீர்கள் என்று கூறினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஆஸிம் பின் கைஸ் ஆவார்கள். அன்ஸாரிகளின் சஃலபா பின் அம்ர் கோத்திரத்தைச் சார்ந்தவர். பத்ர், உஹது போர்களில் அன்னார் பங்கு பெற்றார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் துஃபைல் பின் மாலிக் ஹன்ஸா ஆவார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ உபைது பின் அதீயைச் சார்ந்தவர். அன்னார் பைஅத்தே உக்பா, பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றுள்ளார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் துஃபைல் பின் நுஃமான் ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர். பைஅத்தே உக்பா மற்றும் பத்ர் போரில் அன்னார் கலந்து கொண்டார்கள். உஹது போரிலும் கலந்து கொண்டார்கள். அன்றைய தினம் அன்னாருக்கு 13 காயங்கள் ஏற்பட்டன. அன்னார் அகழ் போரிலும் பங்கு பெற்றுள்ளார்கள். அந்த போரில் அன்னார் ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸஹாக் பின் அப்தே அமர் ஆவார்கள். தீனார் பின் நஜ்ஜாரைச் சேர்ந்தவர். அன்னாரின் தந்தையின் பெயர் அப்தே அம்ர் ஆகும். தாயாரின் பெயர் சமீரா பின்த் கைஸ் ஆகும். பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள். அன்னாரது சகோதரரான உத்பா பின் அப்தே அம்ர் பிஃரே மவூனா நாளன்று ஷஹீதானார்கள்.

அடுத்த சஹாபி ஹஸாக் பின் ஹாரிஸா ஆவார்கள். அன்னார் அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர். அன்னாரின் தந்தையின் பெயர் ஹாரிஸா ஆகும். தாயாரின் பெயர் ஹிந்த் பின்த் மாலிக் ஆகும். அன்னார் பைஅத்தே உக்பாவிலும், பத்ர் போரிலும் கலந்து கொண்டார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் கல்லாது பின் சவைது அன்ஸாரி ஆவார்கள். ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ ஹாரிஸைச் சேர்ந்தவர். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களிலும் கலந்து கொண்டார்கள். பனூ குரைலா போரின்போது புனானா என்ற ஒரு யூத பெண் அன்னாரது தலையில் மேலிருந்து ஒரு பெரிய கல்லை எறிந்தாள். எனவே அன்னாரது தலை உடைந்தது. மேலும் அன்னார் ஷஹீதானார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், கல்லாதிற்கு இரண்டு ஷஹீதுகளுக்குரிய நற்கூலி கிடைக்கும் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஏன் அவ்வாறு இரண்டு ஷஹீதுகளுக்குரிய நற்கூலி கிடைக்கும்? என்று கேட்டப்பட்டபோது, வேதத்தையுடையவர் இவரை ஷஹீதாக்கியுள்ளார் என்று அன்னார் கூறினார்கள்.

அடுத்த சஹாபி ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அன்ஸாரி ஆவார்கள். அன்ஸார்களின் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ சாலிம் பின் கனம் பின் அவ்ஃபச் சார்ந்தவர்கள். அன்னார் பத்ர், உஹது, அகழ் உட்பட அனைத்துப் போர்களிலும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். ஹஸ்ரத் அவ்ஸ் அவர்கள், காமிலீனைச் சார்ந்தவர் ஆவார்கள். காமிலீன் என்பவர் யார் என்றால், அரபியை எழுதத் தெரிந்தவர், அம்பு எய்யும் திறன் கொண்டவர், நீச்சல் தெரிந்தவர் ஆவார். இந்த மூன்று விஷயங்களும் எவரிடம் இருக்குமோ அவர் காமில் என்று அழைக்கப்பட்டார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்கள் அன்னாரை குளிப்பாட்டுவதிலும், அடக்கம் செய்வதிலும் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ஃபஸல் பின் அப்பாஸ், அவர்களது சகோதரர் கஷம், பெருமானார் (ஸல்) அவர்களது விடுதலை செய்யப்பட்ட அடிமை ஷுக்ரான் மற்றும் ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களது புனித உடலை கபரில் வைப்பதற்காக இறங்கினார்கள்.

ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்தபோது பெருமானார் (ஸல்) அவர்கள், அவ்ஸே! எவர் அல்லாஹ்விற்காக பணிவையும், தாழ்மை குணத்தையும் மேற்கொள்வாரோ அல்லாஹ் அவருடைய அந்தஸ்த்தை உயர்த்துவான். மேலும் எவர் ஆணவம் கொள்வாரோ அல்லாஹ் அவரை இழிவுபடுத்துவான் என்று கூறினார்கள்.

ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: எனவே இது மிக முக்கியமான பாடமாகும். இதனை நாம் எப்போதும் நினைவில் வைக்க வேண்டும்.

ஹஸ்ரத் அவ்ஸ் பின் ஹவ்லி ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மதீனாவில் மரணமடைந்தார்கள்.

அல்லாஹ் இந்த அனைத்து சஹாபாக்களின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக.

**மொழியாக்கம்: முஅல்லிம் A. கலீல் அஹ்மது**